இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறல் என்பவற்றில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றம் குறித்த வாய்மொழி மூலமான இற்றைப்படுத்தல்

# மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளர் வொல்கெர் டேர்க் அவர்களின் அறிக்கை மனித உரிமைகள் பேரவையின் 55 ஆவது அமர்வு மார்ச் 1, 2024

மோசமான பொருளாதாரமுகாமைத்துவம் மற்றும் ஊழல் என்பனதொடர்பாக ஆழமான ஜனநாயகரீதியான சீர்திருத்தங்கள் மற்றும் பொறுப்புக்கூறல் என்பன எடுத்துவரப்படவேண்டும் எனக்கூறி இரண்டுவருடங்களுக்கு முன்னர் பல்லாயிரக்கணக்கான இலங்கையர்கள் வீதியிலிறங்கி ஆர்ப்பாட்டஞ்செய்தார்கள். இது இந்தத்தலைமுறை எதிர்கொண்ட மிகமோசமான சமூகப் - பொருளாதார நெருக்கடியாக இருந்துவந்தது. எப்போதோ முன்னெடுக்கப்பட்டிக்கவேண்டிய அனைத்துச்சமூகங்களுக்கும் பயனளிக்கக்கூடிய ஒரு நிலைமாற்றத்தைநோக்கி நாடு நகர்ந்துசெல்லமுடியுமென அப்பொழுது ஒரு பாரியநம்பிக்கை நிலவிவந்தது.

பொருளாதாரத்தை உறுதிப்படுத்திக்கொள்வதற்கென அரசாங்கம் முக்கியமான பல படிமுறைகளை எடுத்திருக்கும் அதேவேளையில், அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள், சட்டத்தின்ஆட்சி மற்றும் ஜனநாயகஆளுகை என்பவற்றின் மீது நீண்டகாலரீதியிலான ஒரு தாக்கத்தைஎடுத்துவரக்கூடிய புதிய அல்லது உத்தேசச்சட்டங்களின் அறிமுகங்குறித்து நான் கரிசனைகொண்டுள்ளேன்.

இவை நிகழ்நிலைக் காப்புச்சட்டம், பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம், இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் ஒலிபரப்பு அதிகாரசபை சட்டமூலம் மற்றும் அரசுசாரா அமைப்புக்களைக் (NGO) கண்காணிப்பதற்கும், பதிவுசெய்வதற்குமான சட்டமூலம் என்பவற்றையும் இவை உள்ளடக்குகின்றன. இவை நிறைவேற்றுத்துறையைப் பல்வேறுவழிகளில் பலப்படுத்துவதுடன், பாதுகாப்புப்படைகளுக்கு பரவலானவிதத்திலான அதிகாரங்களை வழங்குகின்றன. மேலும், சுதந்திரமாக ஒன்றுகூடும்சுதந்திரம், அமைப்புகளில் இணைந்துகொள்ளும்சுதந்திரம் மற்றும் கருத்துவெளிப்பாட்டுச்சுதந்திரம் என்பன தொடர்பான உரிமைகளை அவை மிக மோசமான விதத்தில் கட்டுப்படுத்துகின்றன. சிவில் சமூக வெளியில் மட்டுமன்றி வணிகச்சூழலிலும் தாக்கங்களை எடுத்துவருகின்றன.

அதேநேரத்தில் இலங்கை பொருளாதாரநெருக்கடியின் அழிவுகரமான பின்விளைவுகள் தொடர்ந்தும் ஆழமான பாதிப்புக்களை எடுத்துவருகின்றன. குறிப்பாக, பெருமளவுக்கு விளிம்பு நிலையிலிருந்துவரும் சமூகங்கள் இந்தப்பாதிப்பை எதிர்கொண்டுள்ளன. கடந்த ஆண்டில் வறுமை மேலும் அதிகரித்து 27.9% அளவில் இருந்துவந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. நாடெங்கிலும் வாழ்ந்துவரும் குடும்பங்களில் சுமார் மூன்றில் இரண்டு பங்கு குடும்பங்களின் மாதாந்த வருமானங்கள் 2022 மார்ச் மாதம் தொடக்கம் வீழ்ச்சியடைந்துள்ளன. அதேவேளையில், உணவு, போக்குவரத்து, சுகாதாரம் மற்றும் கல்வி என்பவற்றுக்கான செலவுகள் தொடர்ந்து அதிகரித்துவருகின்றன. அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு மத்தியிலும்கூட, சமூகப்பாதுகாப்பு வழிமுறைகள் பெருமளவுக்கு அழுத்தங்களை எதிர்கொண்டுவருவதுடன், இவ்வாண்டில்

அரசாங்கத்தின் மிகப்பெரிய வரவு செலவுத்திட்டம் அதன் கடன்களைத் திருப்பிச்செலுத்துவதற்காகவே ஒதுக்கப்பட்டுள்ளது. சர்வதேச நிதிநிறுவனங்கள் மற்றும் கொடுகடன்நிறுவனங்கள் இலங்கைக்கு அரசிறையை உறுதிப்படுத்திக்கொள்வதற்கான காலஅவகாசத்தையும், ஆதரவையும் வழங்கவேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன். நாட்டின் பொருளாதார, சமூக, கலாசார உரிமைகளை நிலைநிறுத்துவதற்கு இது அவசியமாகும்.

பல தசாப்தகாலம் நீடித்த உள்நாட்டுப் போர் முடிவடைந்த 15ஆவது வருடநிறைவை இந்த ஆண்டில் இலங்கை நினைவுகூருகின்றது. எனினும், மனித உரிமை மீறல்கள் தொடர்பான விடயம் இன்னமும் கவனத்தில் எடுக்கப்படாதிருந்துவருகின்றது. காணாமற்போன ஆட்களின் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் இன்னமும் தமது அன்புக்குரியவர்களைத் தேடிக்கொண்டிருப்பதுடன், அத்தேடலின்போது அவர்கள் பயமுறுத்தல், கைதுகள் மற்றும் வன்முறை என்பவற்றை எதிர்கொண்டுவருகிறார்கள். நாட்டின் வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் காணித்தகராறுகள் தொடர்ந்து தீவிரமடைந்துவருவதுடன், அது மக்களின் வாழ்வாதாரங்களின் மீது தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. ஓரளவுக்கு அதிகாரப்பகிர்வுக்கான வாக்குறுதியை வழங்கிய மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்றங்கள் என்பன இப்பொழுது செயற்படாதிருந்துவருகின்றன.

பேரழிவினை எடுத்துவந்த உயிர்த்தஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் இடம்பெற்று இப்பொழுது அநேகமாக ஐந்தாண்டுகள் கடந்துசென்றிருக்கின்றன. உயர்நீதிமன்றத்தின் கட்டளைகளுக்கு மத்தியிலும்கூட, பாதிக்கப்பட்டவர்கள் இன்னமும் உண்மை மற்றும் நீதி என்பவற்றை தேடிக் கொண்டிருக்கின்றார்கள்.

உண்மை, ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் என்பவற்றுக்கான ஆணைகுழு ஒன்றுக்கான வரைவுச்சட்டத்தை அரசாங்கம் அறிமுகம் செய்துவைத்திருக்கும் அதேவேளையில், நம்பகமான விதத்தில் உண்மையைக்கண்டறியும் ஒரு செயன்முறை இடம்பெறக்கூடிய ஒருசூழல் நாட்டில் காணப்படவில்லை. சிவில் சமூகப்பிரதிநிதிகள், இதழியலாளர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோர் தொடர்பாகப் பாதுகாப்புப்படையினர் கண்காணிப்பு, துன்புறுத்தல் மற்றும் கைதுகள் என்பவற்றைத் தொடர்ந்து மேற்கொண்டுவருவதாக எனது அலுவலகத்திற்கு தொடர்ச்சியாகக் குற்றச்சாட்டுகள் கிடைத்துவருகின்றன. போரினால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பாக நினைவேந்தல் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதில் சம்பந்தப்பட்டிருப்பவர்களும் இதேவிதத்தில் இந்தப் பாதிப்புகளை எதிர்கொள்கிறார்கள்.

இலங்கைப்பொலிஸ் மற்றும் பாதுகாப்புப்படைகள் ஆகிய தரப்பினரால் பாலியல்வன்முறையையும் உள்ளடக்கியவிதத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் ஆட்கடத்தல்கள், சட்டவிரோதமான தடுத்துவைப்பு மற்றும் சித்திரவதை என்பன தொடர்பான நம்பகமான தகவல்கள் எனது அலுவலகத்துக்கு மீண்டும் மீண்டும் கிடைத்து வருவது குறித்து நான் ஆழ்ந்தகவலை அடைந்துள்ளேன். இச்சம்பவங்கள் ஒரு சில 2023 ஆம் ஆண்டில் பிரதானமாக நாட்டின் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் நிகழ்ந்திருப்பதாகக் கூறப்படுகின்றது. கடந்தவாரம் ஒரு புதிய பொலிஸ் மா அதிபரின் நியமனம் ஊர்ஜிதம் செய்யப்பட்டது. 2010 ஆம் ஆண்டில் அவர் ஆளொருவரை சித்திரவதை செய்தாரென உயர்நீதிமன்றம் கண்டறிந்த நிலைக்கு மத்தியிலேயே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இந்தச்சம்பவங்கள் அனைத்துமடங்கிய பாதுகாப்புத்துறை சீர்த்திருத்தமொன்றுக்கான தேவையையெடுத்துக்காட்டுகின்றன.

இலங்கையில் பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதற்கென எனது அலுவலகம் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றது. குற்றவியல் நீதி புலன்விசாரணைகளை முன்னெடுத்துவரும் பல்வேறு நியாயாதிக்கங்களுக்கு அது ஆதரவளித்துவருவதுடன், மனிதஉரிமைகள் சம்பந்தப்பட்ட திட்டவட்டமான சம்பவங்கள் குறித்த அதன்தகவல் மற்றும் சான்று அடித்தளத்தையும் பலப்படுத்திவருகின்றது. மேலும், அது ஆட்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக ஆராய்ச்சிகளை மேற்கொண்டுவருவதுடன், பாதிக்கப்பட்டவர்களுடன் கலந்தாலோசனைகளையும் நடத்துகின்றது.

பிற்போக்கு இயல்பிலான சட்டங்கள் மற்றும் எதேச்சதிகார அணுகுமுறைகள் என்பவற்றின் பின்னணியில் இலங்கையில் நிலைத்துநிற்கக்கூடிய சமாதானம் மற்றும் நல்லிணக்கம் என்பன ஏற்படமுடியாது. அது கடந்தகாலத்தின் மனித உரிமைமீறல் நிலைமைகளை தொடர்ந்து தக்கவைத்துக்கொள்வதற்கு மட்டுமே உதவமுடியும்.

இந்தப்போக்கை உடனடியாக திசைதிருப்ப வேண்டுமெனவும், கடந்தகால மற்றும் நிகழ்கால மனித உரிமைமீறல்கள் மற்றும் பொருளாதாரக்குற்றங்கள் என்பனதொடர்பாக புலன்விசாரணைகளைநடத்தி, வழக்குகளைத் தாக்கல்செய்வதற்கென நம்பகமான பொறுப்புக்கூறல் வழிமுறைகளை மேற்கொள்ளவேண்டுமெனவும் நான் அரசாங்கத்திடம் வலிந்துகேட்டுக்கொள்கின்றேன். அகிலம்தழுவிய மற்றும் பிராந்தியத்துக்கு வெளியிலான நியாயாதிக்க முறைகளின்பாவனை மற்றும் மிகவும் பாரதூரமான மனித உரிமைமீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் என்பவற்றை நிகழ்த்தியிருப்பதாக கூறப்படும் நபர்களுக்கு எதிராக இலக்கு வைக்கப்பட்ட வழிமுறைகள் என்பவற்றையும் உள்ளடக்கியவிதத்தில் இந்த முயற்சிகளை தொடர்ந்தும் பலப்படுத்தவேண்டுமென நான் உறுப்புஅரசுகளிடமும் வலிந்து கேட்டுக்கொள்கின்றேன்.

நாட்டின் மோதல் மற்றும் பொருளாதாரநெருக்கடி என்பவற்றுக்கான மூலகாரணங்களைக் கவனத்திலெடுத்து, பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதன்மூலம் மட்டுமே உண்மையான நல்லிணக்கம் மற்றும் நிலைத்துநிற்கக்கூடிய சமாதானம் மற்றும் அபிவிருத்தி என்பவற்றை சாதித்துக்கொள்ளக்கூடிய அதன் வாய்ப்புகளை இலங்கை மேம்படுத்திக்கொள்ளமுடியும்.

நன்றி.